# வரலாற்றில்
# பார்ப்பனிய வன்முறைகள்

அப்துல் சமது

# வரலாற்றில் பார்ப்பனிய வன்முறைகள்

"பார்ப்பனருக்கு சேவகம் செய்வதே இந்து ராஷ்டிரம்" என்றார், ஆர்.எஸ்.எஸ். தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கர். "இந்து ராஷ்டிரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை என்ன ?" என்று கேள்வி எழுப்பினார் அப்துல் சமது.

*கோபியில் பிப்.28, 2016 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாட்டில் மனித நேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் அப்துல் சமது ஆற்றிய உரை:*

தமிழ்நாடு விரைவில் சட்டமன்ற தேர்தலைச் சந்திக்க இருக்கின்ற சூழலில் அரசியல் கட்சிகள் எல்லாம் யாருடன் கூட்டணி வைத்துக்கொள்ளலாம் என ஆளாய் பறந்துக் கொண்டிருக்கின்ற நிலையில் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாட்டினை இங்கு திராவிடர் விடுதலைக் கழகம் நடத்து கின்றது. காவல் துறை அனுமதி மறுத்தும் உயர்நீதி மன்றத்தை அணுகி அதன் அனுமதியோடு இம்மாநாடு நடைபெறுகிறது. அடுத்த தேர்தலைப் பற்றி யோசிப்பவர்கள் சாதாரண அரசியல்வாதிகள்; ஆனால் அடுத்த தலை முறையைப் பற்றி சிந்திப்பவர்கள் பெரியார் தொண்டர்கள். இதுதான் இம்மாநாட்டின் நோக்கம்.

அடுத்த தலைமுறையைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் பார்ப்பனீய ஆதிக்கத்தை அதன் கொடூர முகத்தை நாம் தோலுரித்தே ஆக வேண்டும். அதற்கு எத்துணை இடைஞ்சல்கள் வந்தாலும், அடக்குமுறைகளைச் சந்தித்தாலும் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் திராவிடர் விடுதலைக் கழகத்தினருக்கு மனிதநேய மக்கள் கட்சி ஒரு அரசியல் கட்சியாக இருந்தாலும் என்றைக்கும் தோளோடு தோள் நிற்போம் என உறுதியை அளிக்கின்றேன்.

அதுபோல் இப்போது பி.ஜேபி. தனிப் பெரும் பான்மையுடன் வெற்றி பெற்ற பிறகு அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையில் உட்காரும்போது, முதல் பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் மோடி சொல்கிறார், "இந்த வெற்றி என்பது நாம் மட்டும் பெற்ற வெற்றிஅல்ல; இந்த வெற்றிக்காக நமக்கு முன்னால் 5 தலைமுறை உழைத்து இருக்கிறது" என்ற செய்தியைச் சொன்னார். ஐந்து தலைமுறை என்பது ஆர்.எஸ்.எஸ்.இன் தொடக்கத்தில் இருந்து என்பதுதான் அவரது கணக்கு.

அந்த கனவு ஆட்சியின் விபரீதங்களை நாம் யோசிக்க வேண்டும். வெறும் முஸ்லீம்கள் மட்டும் பாதிக்கப்படுவார்கள் என்றால், இல்லை. கிறித்துவர்களுக்கு மட்டுமா என்றாலும் அதுவும் இல்லை. இந்த பாசிச ஆட்சியால் இந்து என்று சொல்லப்படுகின்ற ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கு எதிராகவே அமையும்.

இன்றைக்கு மாட்டுக்கறியை வைத்து இருந்ததாகக் கூறி ஒரு 70 வயது இசுலாமிய முதியவரை பெருங்கூட்டமாக சென்று காவிக் கும்பல்கள் அடித்தே கொன்று இருக்கிறது. அவருடைய மூத்த மகன் தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப் படையின் அதிகாரி; அவர் சொல்கிறார், "இந்த நாட்டைப் பாதுகாக்கவே நான் இராணுவத்தில் உள்ளேன். ஆனால் என் வீட்டைப் பாதுகாக்க யாரும் இல்லையே" என மனம் குமுறி பேட்டியளித்தார்.

அவருடைய மகள் சொன்னார், "என் வீட்டில் இருந்தது மாட்டுக்கறி அல்ல ஆட்டுக்கறி என ஆய்வில் தெரிந்து விட்டது. அடித்தே கொல்லப்பட்ட என் தந்தையின் உயிரை யார் திருப்பித் தருவார்கள் ?" என மனம் குமுறி கேட்ட கேள்வி, நாட்டில் உள்ள ஒவ்வொருவரையும் உலுக்கிப் போட்டது. காவிப் பார்ப்பனக் கும்பலின் வெறிச் செயலை மனித நேயத்தை விரும்புகிற எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நாட்டில் ஒரு பொய்யான எதிரியைக் கட்டமைக்க வேண்டும் என்ற பாசிச சிந்தனையோடு முஸ்லீம்களை எதிரிகளாகக் கட்டமைத்து இருக்கிறார்கள்.

முஸ்லீம்கள் என்றால், "பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், தேச விரோதிகள்" என்பது எங்களுக்கு பார்ப்பன காவிக் கும்பல் அளித்துள்ள பட்டம். இப்படிப்பட்ட அவப் பெயரோடுதான் இந்நாட்டின் முஸ்லீம்கள் தனிமைப்படுத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியா வேறு, தமிழகம் வேறு, மற்ற மாநிலங்களில் குறிப்பாக வடமாநிலங்களில் முஸ்லீம்களை எதிரிகளாகக் காட்டி, தனிமைப்படுத்தி மற்றவர்களை ஒன்று சேர்த்து வைத்துவிட்டனர். ஆனால், தமிழகத்தில் யார் ஒட்டு மொத்த ஒடுக்கப்பட்ட மக்களின் எதிரியோ அந்த பார்ப்பனியத்தைத் தனிமைப் படுத்தி நம்மை எல்லாம் ஒன்று சேர்த்த பெருமைக்குரியவர் தந்தை பெரியார் என்ற நன்றிப் பெருக்கோடு நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம்.

இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரிகள் முஸ்லீம்கள், கிறித்தவர்கள் அல்ல; மாறாக வந்தேறிகளான பார்ப்பனர்கள் தான் பயங்கரமான எதிரிகள். பார்ப்பன வர்ணாசிரம தர்மப்படி பிறப்பின் அடிப்படையில் மக்களை ஜாதி ரீதியாகப் பிரித்து, நமது வாழ்வை நாசப்படுத்தி - தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம், தொடக்கூடாத ஜாதி, உங்களுக்கு கல்வி உரிமை கிடையாது என மக்களைப் பிளவுபடுத்தி உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது பொதுவீதிகளில் நடக்க உரிமை இல்லை, பொதுக் குளங்களில் தண்ணீர் எடுக்க உரிமை இல்லை என முடக்கியது முஸ்லீம்கள் அல்ல; கிறிஸ்துவர்கள் அல்ல; வேறு யாருமல்ல; மிகவும் குறைந்த 3 சதவீதம் இருக்கக்கூடிய பார்ப்பனர்கள் தான் என்ற விழிப்புணர்வை இந்த மண்ணிற்கு தந்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

பார்ப்பன அடக்குமுறைகளுக்கு எதிராக இங்கு படமாக இருக்கின்ற சர்.பிட்டி தியாகராயர், நடேசனார், டி.எம்.நாயர் போன்றவர்கள் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள்.

தலித்துகளுக்காக மட்டும்தான், இசுலாமியர்களுக்கு மட்டும்தான், பெரியார் இயக்கம் போராடும் என்று சொல்லியிருக்கிறார்கள். செட்டியார் சமுதாயத்தைச் சார்ந்த சர். பிட்டி தியாகராயர், முதலியார் சமுதாயத்தை சேர்ந்த டாக்டர் நடேசனார் போன்றவர்கள் பார்ப்பனிய கொடுமைகள் தாளாமல் அவைகளுக்கு எதிராகப் போராடினார்கள். நீதிக் கட்சி ஆட்சி சமூகநீதியில் ஒரு மைல்கல்.

### தியாகராயருக்கு இழைத்த அவமதிப்பு

சர். பிட்டி ஒரு மிகப் பெரிய வள்ளல். மிகப் பெரிய பணக்காரர். மயிலை கபாலீஸ்வரர் கோயில் குடமுழுக்கு விழாவிற்கு அவரிடம் நன்கொடை கேட்டபோது அப்போதே ரூ.10 ஆயிரம் கொடுத்தார். ஆனால் அக்கோயில் குடமுழுக்குக்கு அவர் செல்லும்போது அவருக்குக் கீழே பணியாற்றிய ஒரு பார்ப்பன பியூனை விட்டு தியாகராயரை இதற்குமேல் நீங்கள் வரக்கூடாது என தடுத்தது பார்ப்பனக் கும்பல். "எனக்கே அனுமதி இல்லையா" எனக் கேட்டபோது "நீங்கள் சூத்திரர், பார்ப்பனரைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்க முடியாது" என அவரைத் தடுத்தது பார்ப்பனக் கூட்டம்.

தியாகராயர் சிந்தித்தார். எனக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கும் ? எனவே, இவற்றை ஒழிக்க வேண்டும் என்று எண்ணி அதே கருத்துள்ள மற்றவர்களையும் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டதுதான் நீதிக்கட்சி. இட ஒதுக்கீட்டை முதன் முதலில் இம்மண்ணில் நடைமுறைப்படுத்திய ஆட்சி நீதிக்கட்சியின்

ஆட்சி. நீதிக்கட்சி சமூகநீதியில் ஒரு மைல்கல் இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் அப்படி நடைபெறவில்லை. பார்ப்பனியத்திற்கு எதிராக மிகப் பெரிய போர் அப்போது நடந்தது.

ஆனால், இன்றைக்கு பார்ப்பனீயம் ஒழிந்ததா என்றால் இல்லை. மத்தியில் உள்ள ஆட்சி என்பது மீண்டும் இம் மண்ணில் வர்ணாசிரம தர்மத்தைக் கொண்டு வர வேண்டும் எனத் துடிக்கும் கொடிய பாசிச பார்ப்பன சிந்தனை உள்ள ஆட்சி மோடியின் ஆட்சி. சனாதான தர்மம் தான் உண்மையான தர்மம்; அதை நிலை நாட்டுவது தான் எங்களது கடமை என்கிறது.

மோடி ஆட்சியை மத்தியில் உட்கார வைத்தது பார்ப்பனியம். வரும் கல்வியாண்டிலிருந்து மத்திய அரசு பள்ளிகளில் சமஸ்கிருதம் கட்டாயக் கல்வி என்கிறது மோடி அரசு.

அரசியல் சாசன சட்டப்படி 22 மொழிகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. அந்த மொழிகளைக் கோடிக் கணக்கான மக்கள் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள், ஆனால், சமஸ்கிருதத்தைப் பேசக்கூடிய மாநிலம் எது என்று நாங்கள் கேட்கிறோம். கடைசியாக வந்த புள்ளிவிவரப்படி இந்த நாட்டில் வெறும் 14,500 பேர்கள் மட்டும்தான் சமஸ்கிருதத்தைப் பேசுகின்றனர். இந்த செத்த சமஸ்கிருதமொழி - அதன் பெயரில் சமஸ்கிருத வாரம் கொண்டாடுவதற்கு மத்திய அரசு பல கோடி ரூபாய் செலவு செய்கிறது. வரும் கல்வியாண்டில் இருந்து சமஸ்கிருதம் கட்டாயக் கல்வி என மத்திய அரசு சொல்லிவிட்டது.

அப்படி என்ன சிறப்பு சமஸ்கிருதத்திற்கு இருக்கிறது ? பார்ப்பனிய பண்பாட்டு மொழி என்பத்தை தவிர இந்த சமஸ்கிருதம் தான் நம்மை ஜாதிகளாகப் பிரித்து அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. அத்தகைய கொடிய சமஸ்கிருதத்தைப் பாதுகாத்து வர்ணாசிரம தர்மத்தை மீண்டும் கொண்டுவர மோடி அரசு துடிக்கிறது.

**‘பார்ப்பனரை வணங்கு’**

அப்படி அவர்கள் உருவாக்கும் இந்து ராஷ்டிரத்தில் நமக்கு என்ன வேலை ? அதில் நாம் என்ன நிலையில் இருப்போம், ஆர்.எஸ்.எஸ். சித்தாந்த தலைவர் குருஜி கோல்வால்கர் சொல்லுகிறார்.

நான் ஒருமுறை தென்னாட்டிற்கு சென்றபோது நம்முடைய கலாச்சாரத்தை நேரில் பார்த்தேன். என்ன கலாச்சாரம் என்றால். ஒரு ஆங்கிலேய அதிகாரி நடந்து சென்று கொண்டு இருந்தார். அவருக்கு பின்னாலேயே பார்ப்பன சமூதாயத்தைச் சார்ந்த ஒரு பியூன் நடந்து வந்து

கொண்டிருந்தார். எதிரிலே நாயுடு சமுதாயத்தைச் சார்ந்த அதிகாரி, அந்த வெள்ளை அதிகாரியின் கீழ் பணி செய்யக் கூடியவர் வருகிறார். ஆங்கிலேய அதிகாரியைப் பார்த்து வணக்கம் கூறி கைகுலுக்குகிறார்; பின்னால் வரும் பார்ப்பன பியூனைப் பார்த்தவுடன் அவரின் காலில் விழுந்து கும்பிடுகிறார். வெள்ளைக்கார அதிகாரிக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் ஏற்பட்டது. உடனே நாயுடு அதிகாரியிடம் இது குறித்து கேட்ட போது அதற்கு அவர் கூறுகிறார், "நீங்கள் எனக்கு மேலதிகாரிதான் ஆனால் மிலேச்சர் பார்ப்பனர் பியூன் தான்; அவர் எங்கள் சாமி அதனால் அவர் காலில் விழுந்தேன்" என்றார்.

இதுதான் நமது கலாச்சாரம்; இதுதான் இந்து தர்மம் என்று குருஜி கோல்வால்கர் எழுதி வைத் திருக்கிறார். இத்தகைய கலாச்சாரத்தை மீண்டும் இங்கு கொண்டு வரவே மோடி அரசு விரும்புகிறது.

எச். ராஜா, இராம. கோபாலன், சுப்பிரமணிய சாமி பார்ப்பனர்கள் தமிழ கத்தில் மதக் கலவரத்தை உருவாக்க உருவாக்கிய குறுந்தகட்டை தமிழக அரசு தடை செய்திருக்கிறது என்ற தகவலை அப்துல் சமது வெளியிட்டார்.

**பன்சாரே ஏன் கொல்லப்பட்டார்?**

மராட்டியத்தில் கோவிந்த் பன்சாரே என்கிற பொதுவுடைமை இயக்கத் தலைவர், எழுத்தாளர் இருந்தார். அவரை நடைப்பயிற்சியின் போது சுட்டுக் கொன்றது பார்ப்பன காவிக்கும்பல். எதற்காக இந்த படுகொலை நடந்தது என நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'யார் இந்த சிவாஜி?' என்ற ஒரு புத்தகத்தை கோவிந்த் பன்சாரே எழுதினார். சிவாஜி என்று சொன்னால் முஸ்லீம்களுக்கு எதிரான ஒரு மன்னர். சத்ரபதி சிவாஜி, முஸ்லீம்களுக்கு எதிராகக் களமாடியவர்; இந்துக்களின் தலைவர்; அவுரங்கசீப் போன்ற முஸ்லீம் மன்னர்களுக்கு எதிராகப் போரிட்டவர் எனக் கூறி, அரபிக்கடலில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயில் சிவாஜிக்கு சிலை எழுப்பப் போகிறோம் என்று மகாராஷ்டிர அரசு அறிவித்திருக்கிறது.

சத்ரபதி சிவாஜியை பாசிச காவிக்கும்பல் இந்துக்களின் தலைவனாக முன்னிறுத்துகிறது. ஆனால், சிவாஜியைப் பற்றி நமக்கு எல்லாம் அண்ணா அவர்கள் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்' நாடகம் மூலம் பாலபாடமே நடத்திவிட்டார்.

சிவாஜி இந்துக்களின் தலைவன் அல்ல என்று கோவிந்த பன்சாரே புத்தகம் எழுதினார்.

சிவாஜி என்பவர் காவிகளின் தலைவன் அல்ல; காவிய தலைவன். சிவாஜியின் படையில் மெய்க் காப்பாளராக இசுலாமியர்கள் இருந்தனர்; படைத் தலைவர்களாக, நம்பிக்கை மிக்க அரசியல் தூதர்களாக இருந்தனர் என்ற பட்டியலை கோவிந்த் பன்சாரே சொல்கிறார்.

அதுபோல அவுரங்கசீப் படைகளில் தளபதிகளாக இந்துக்கள் இருந்து இருக்கிறார்கள். இங்கே இந்துக்களும், அங்கே இசுலாமியர்களும் எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்து இருக்கிறார்கள்.

சிவாஜிக்கும், அவுரங்கசீப்பிற்கும் நடந்த போர் என்பது மதத்திற்கான போர் அல்ல; அது மண்ணிற்கான போர். இந்த மண்ணை யார் ஆக்கிரமிப்பு செய்வது என மண்ணிற்கான நடந்த போரே தவிர மதத்திற்கான போரே அல்ல என்பதை பல்வேறு ஆதாரங்களோடு அந்த புத்தகத்தில் கோவிந்த் பன்சாரே எழுதினார். அவரின் புத்தகம் 5 லட்சம் பிரதிகள் விற்றுத்தீர்ந்தன.

இவர்களைப் பற்றி நாடு முழுவதும் தெரிந்தது; மக்கள் விழிப்புணர்வு பெறுகிறார்கள் என்கிற ஒரே காரணத்தால் கோவிந்த் பன்சாரே அவர்களைச் சுட்டுக் கொன்றது பார்ப்பன இந்து மதவெறிக் கும்பல். கோவிந்த் பன்சாரேயைக் கொன்றவர்கள் யாரையும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அதுபோல் மூடநம்பிக்கைக்கு எதிராக போராடியதற் காக நரேந்திர தபோல்கரைச் சுட்டு கொன்றதும் இந்து காவிக் கும்பல்தான்.

சாகித்ய அகாடமி விருதுபெற்ற கர்நாடகத்தைச் சார்ந்த எழுத்தாளர் கல்புர்க்கி அவர்களைச் சுட்டுக் கொன்றனர். இக்கொலைகளில் கொலையாளிகள் எவருமே கைது செய்யப்படவில்லை. எதை நோக்கி செல்கிறது இந்த நாடு?

அதுபோல் அநியாயமாக பார்ப்பன மதவெறியர்களால் தற்கொலை செய்துகொள்ள செய்யப்பட்ட ரோகித் வெமுலாவின் மரணம், இந்நாட்டில் மிகப் பெரிய அதிர்வினை உருவாக்கி இருக்கிறது. மத்திய இணை அமைச்சர் ஸ்மிருதி இரானி பாராளு மன்றத் தில் மிகப்பெரிய பொய்யைக் கூறியுள்ளார். பிணத்தை வைத்து அரசியல் நடத்துகிறார்கள் என்றும் அவரின் உடலை பிரேத பரிசோதனைக்கு எடுத்து செல்ல அனுமதிக்க வில்லை என்றும் சொல்லியுள்ளார்.

### ரோகித் வெமுலா சொன்ன சேதி!

ரோகித் வெமுலா சொன்ன செய்தி என்ன? எங்களிடமிருந்து அம்பேத்கரை பிரிக்க வேண்டுமானால் ஒரு பத்து கிராம் விசம், அல்லது தூக்குக் கயிறைக் கொடுத்து அனுப்புங்கள் என தனது கடிதம் ஒன்றில்

குறிப்பிட்டுள்ளார். அந்த அளவிற்கு பல்கலைக்கழகத்தின் சூழல் இருக்கிறது என்றால் அதற்கு யார் காரணம் ?

பார்ப்பனீயம் தான் இந்த நாட்டில் நடைபெறும். அத்தனை கொடிய செயல்களுக்கும் காரணம் என்பதை நாம்தான் மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இசுலாமியர்களை இந்த நாட்டில் பயங்கரவாதிகள் என காட்டுவதன் நோக்கம் பார்ப்பன வர்ணாசிரம சித்தாந்தத்திற்கு நேர் எதிர் சித்தாந்தத்தை இசுலாம் சொல்கிறது.

பார்ப்பனீயம் சொல்வது ஒருவன் படைக்கப்படும்போதே நான்கு வகை ஜாதி அடுக்குகளாக படைக்கப்படுகிறான். இதை கடவுள்தான் செய்கிறார். கீதையில் சதுர்வர்ணம் மயா சிருஷ்டம் என பகவான் கிருஷ்ணன் கீதையில் கூறுகிறார். ஆனால் இசுலாம், 'மனிதன் அனைவரும் ஒரே சரி சமம்' எனச் சொல்கிறது.

சமத்துவத்தை இசுலாம் போதிக்கின்ற காரணத்தினால் தான், 'கடவுளை மற' என்று சொன்ன தந்தை பெரியார்கூட ஒரு சமயம், 'இன இழிவு ஒழிய இசுலாமே நன்மருந்து' என்று சொன்னார்.

அதனால்தான் இசுலாமியத்தையும், பெரியாரையும் எதிர்க்கிறார்கள். அம்பேத்கரைக்கூட உள்வாங்கிய பார்ப்பனிய காவிக் கும்பல்காரர்கள் பெரியாரை உள்வாங்க முடியவில்லை. ஏனென்றால் பெரியார் ஒரு பெரும் நெருப்பு.

புத்தரைப் பார்ப்பனீயம் உள்வாங்கி அவரை விஷ்ணுவின் **11**ஆவது அவதாரம் என்று சொல்லி புத்த மதத்தை அழித்தது. அம்பேத்கர் சொன்னார், "நான் இந்துவாக பிறந்தது எனது தவறு இல்லை; ஆனால் நான் இறக்கும்போது கண்டிப்பாக இந்துவாக இறக்கமாட்டேன்" என்று கூறினார். அதுபோல் அம்பேத்கர் அவர்களை 'இந்துத்துவாதி' என உள் வாங்க முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் பார்ப்பனீயத்தால் உள்வாங்க முடியாத, உள்வாங்க நினைக்கக்கூட முடியாத ஒரே தலைவர் தந்தை பெரியார் தான்.

டெல்லி ஜவகர்லால் பல்கலைக்கழகத்தில் அப்சல்குருவின் நினைவு தினத்தை முன்னிட்டு ஒரு கருத்தரங்கத்தை நடத்த மாணவர்கள் முயற்சி செய்கிறார்கள். அதற்கு பல தடைகள் போடுகிறது நிர்வாகம். கருத்தரங்கம் அன்று மாணவர்கள் பேரணியாக வரும்போது ஏ.பி.வி.பி அமைப்பைச் சார்ந்த பார்ப்பன மாணவர்கள் உள்ளே ஊடுருவி 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என கோசம் போட்டுள்ளனர். அதற்கு மாணவர்கள் அமைப்பின் தலைவர்

கன்யாகுமார்தான் கோசம் போட்டார் எனக்கூறி அவரை தேச விரோத வழக்கில் கைது செய்கிறார்கள்.

**அப்சல்குருக்குஅநீதி!**

அப்சல்குரு மீது குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. ‘மக்களின் கூட்டு மனசாட்சிக்காக தூக்கு’ என்று சொன்னது நீதிமன்றம். பாராளுமன்றம் தாக்குதலில் நேரடியாக அப்சல்குரு ஈடுபட்டார் என ஒரு சாட்சிகூட இல்லை. எந்த தீவிரவாத அமைப்பிலும் அப்சல்குரு உறுப்பினராக இருந்ததில்லை என்றும் கூறியது நீதிமன்றம். இந்நிலையில் உலகிலேயே ஒருவரை நிரபராதி என்று சொல்லி விட்டு அவரை தூக்கிலிட்ட ஒரே நாடு இந்தியாதான்.

அப்சல் குருவிற்கு எதிராக வழங்கப்பட்ட தூக்கு அநீதி. அதை விளக்கத்தான் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட கம்யூனிச இயக்கத் தலைவரான தோழர் ராஜாவின் மகள் அபராஜிதாவை சுட்டுக் கொல்ல வேண்டும் என இங்குள்ள கேவலமான பிறவியான எச்.ராஜா போன்றோர் ஊளையிடுகிறார்கள். இத்தகைய மோசமான வெறித்தனங்கள் மோடி ஆட்சியில் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழகத்தில் சமீபத்தில் எச்.ராஜா, இராமகோபாலன், சுப்ரமணியசாமி ஆகிய மூவரும் தமிழகத்தை சூழும் ஜிகாத் எனும் ஒரு ‘சிடி’யை வெளியிட்டார்கள் 6 மணி நேரத்திற்கு மேல் ஓடக் கூடியதாகும். இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகளில் இசுலாமிய கிராமங்கள் அதிகமாகி விட்டன; இதன் மூலம் கள்ளக்கடத்தல், ஆயுத சேகரிப்பு நடக்கிறது என நச்சுக் கருத்துகளை அந்த ‘சிடி’ சொல்கிறது.

அதில் இந்துக்கள் இங்கு வாழ்வதையும், கோவில்களில் வழிபாடு நடத்துவதையும் முஸ்லீம்கள் தடுக்கிறார்கள் என சொல்கிறது. இப்படிப்பட்ட பச்சை பொய்யைப் பரப்பி இங்கு கலவரத்தை தூண்ட பார்ப்பன இந்து மதவாதக் கும்பல் முயற்சிக்கிறது. நம் தமிழகத்தில் இவர்கள் கனவு ஒருபோதும் பலிக்காது. ஏனென்றால் இது பெரியாரின் மண். அவரால் பக்குவபடுத்தப்பட்ட மண். காவிகள் இதை புரிந்துக் கொள்ளவேண்டும்.

இதை சமூக வளைதளம் மூலம் பரப்புகிறார்கள் இதைத் தடுக்க மனிதநேய மக்கள் கட்சி உள்பட ஜனநாயக சக்திகள் போராடியதன் விளைவாக தமிழக அரசு அதை யூடியூப்பில் தடைசெய்து ஆர்எஸ்எஸ் அமைப்பைச் சேர்ந்த ஒருவரை கைதும் செய்து இருக்கிறது. அதற்காக நாங்கள் தமிழக அரசைப் பாராட்டுகிறோம்.

அமைதியாக உள்ள தமிழகத்தில் பார்ப்பன இந்து மதவாதக் கும்பல் திட்டமிட்டு கலவரத்தை தூண்டுவதற்கு முயற்சிக்கிறது.

**கலவர முயற்சி**

இதுபோன்ற ஒரு 'சிடி' தான் மத்திய பிரதேசத்தில். 2 சீட் வெற்றிபெற முடியாத பாஜக இன்றைக்கு மோடி ஆட்சிக்கு வரவே ஒரு 'சிடி'தான் காரணம். ஜாட் இனத்தை சேர்ந்த ஒரு பெண்ணை ஒரு முஸ்லீம் பாலியல் பலாத்காரம் செய்து கும்பலாக கொலை செய்ததாக 'சிடி' தயாரிக்கப்பட்டது. அதை விநியோகித்து முஸ்லீம்களுக்கு எதிராக கலவரம் தூண்டி ஆட்சி அமைத்தனர். அக்கலவரத்தில் 120 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். ஒன்றரை இலட்சம் மக்கள் அகதியானார்கள். முசாபர் நகர் கலவரம் அதில் இறந்த உடல்களை பிணக்கூராய்வு செய்த மருத்துவர் சொன்னது, "நான் 20 ஆண்டுகள் இந்த துறையில் இருக்கிறேன்; இதுபோல் கொல்லப்பட்ட, இரு பகுதிகளாக வெட்டப்பட்ட கர்ப்பிணி பெண்ணின் வயிற்றில் இருபுறமும் வெட்டி, வெளியே எடுத்த சிசுவைகூட கொலை செய்யப்பட்டதை நான் இதுவரை கண்டதில்லை" என கூறுகிறார்.

இத்தகைய மிகப் பெரிய கொடூரத்தைப் பார்ப்பனியம் தான் நடத்தியது. சிறுபான்மை மக்களுக்கு எதிராக தாக்குதலில் பார்ப்பனர்கள் நேரிடையாக சண்டைக்கு வந்தது கிடையாது. அப்பாவிகளான பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் கொடிய மதவெறியைப் புகுத்தி அவர்களை மூளைச்சலவை செய்து சிறுபான்மை மக்களுக்கு எதிராக கொம்புசீவி விடப்படுகின்றனர். இந்த நாட்டில் நடந்த எந்த கலவரத்திலும், எந்த குண்டு வெடிப்பிலும் ஒரு பார்ப்பனர்கூட இறந்தது கிடையாது இதுதான் பார்ப்பனர் சூழ்ச்சி.

காந்தியைக் கொன்றாலும்கூட இந்த நாட்டில் பார்ப்பனீயம் பாதுகாப்பாகவே இருக்கிறது. இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்ட போது இந்த நாட்டில் 3 ஆயிரம் அப்பாவி சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ராஜிவ்காந்தி கொலை செய்யப்பட்டதில் ஒன்றரை லட்சம் அப்பாவி ஈழத்தமிழர்கள் பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் என ஈவு இரக்கம் இல்லாமல் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் இந்த தேசத்திற்கு விடுதலை பெற்று தருவதற்காகவும், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட காந்தியடிகளை கொலை செய்தது நாதுராம் கோட்சே தலைமையிலான பார்ப்பனர்கள். அதுவும் மராட்டியத்தில் உள்ள சித்பவன் பார்ப்பனர்கள். அதற்கு எதிர்வினையாக ஒரு பார்ப்பனர்கூட இந்த நாட்டில் இரத்தம் சிந்தவில்லை. மாறாக ஒரு கும்பலால் கொலையாளிகள்

தேசபக்தர்களாகப் போற்றப்படுகின்றனர். இது தான் பார்ப்பனீயம் இதைத்தான் நாம் ஒழிக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

சூத்திரன் கொலை செய்தால் அவனுக்கு கொடூரமாக தண்டனை வழங்கவேண்டும். ஆனால், பார்ப்பனர்கள் கொலை செய்தால் அவன் தலைமுடியை மட்டும் சிரைத்தால் போதும். இதைச் சொல்வது மனுநீதி, இதை மீண்டும் கொண்டு வரத்தான் மோடி அரசு துடிக்கிறது. இதுதான் பார்ப்பனர்களின் ஒரு குலத்திற்கு ஒருநீதி எனும் அநீதியாகும்.

**இந்த நாளின் முக்கியத்துவம்!**

இந்த மாநாடு நடைபெறும் இந்த நாள் மிகவும் முக்கியமான நாளாகும். இதே பிப்ரவரி 27, 28, 29 நாட்களில் தான் குஜராத்தில் மிகக் கொடூரமான படுகொலைகள் நடந்தன. குஜராத் முதல்வராக இருந்த மோடி அரசு உயர்அதிகாரிகளை அழைத்து ஒரு கூட்டத்தைப் போட்டு என்ன சொன்னார் தெரியுமா ? “இந்துக்கள் அவர்களின் கோபத்தை வெளிபடுத்த அனுமதியுங்கள் என்று சொன்னார். மூன்று நாட்களுக்கு எதையும் தடுக்காதீர்கள்” என மோடி உத்தரவு போட்டார். அவர் மாநிலத்தில் குடிமக்களான முஸ்லீம்கள் 3 ஆயிரம் பேரை படுகொலை செய்யப்பட்ட நாள் தான் இது. அப்போது வாஜ்பாய்கூட “மோடி இராஜதர்மத்தை மீறி விட்டார்” எனக் கூறினார். அந்த படுகொலைகளை நிகழ்த்தியதைத் தவிர வேறு எந்த தகுதியும் இல்லாத மோடியை முதல்வர் பதவியிலிருந்து இன்றைக்கு நாட்டின் பிரதமராக உட்கார வைத்தது பார்ப்பனீயம். இன்றைக்கு உச்சபட்ச அதிகாரத்தோடு பார்ப்பனீயம் மீண்டும் வீறு கொண்டு எழுகிறது. இதை நாம் பெரியாரின் கைத்தடியைக் கொண்டு மட்டுமே அடித்து வீழ்த்த முடியும்.

இன்றைக்கு ‘பாரதமாதா கி ஜே’ எனும் கோசம் போடும் ஆர்.எஸ்.எஸ் பார்ப்பன காவிக் கும்பலை பார்த்துக் கேட்கின்றேன், இந்த பாரதமாதா அடிமை சங்கிலியால் கட்டப்பட்டு கிடந்தபோது அதை உடைப்பதற்கு நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட போரிட்டவர்களில் எத்தனை பேர் ஆர்.எஸ்.எஸ் பார்ப்பன காவிக்கும்பல்கள் ? ஒருவர் கூட இல்லையே !

விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெறாத ஆர்.எஸ்.எஸ் கும்பல், பார்ப்பனக் கும்பல் இன்றைக்கு இந்தியாவின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணமான பார்ப்பனீயம் ஒடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது நசுக்கப்பட்டிருக்கிறதா ? எனக் கேட்கிறோம். இந்த கும்பலுக்குதான் இன்றைக்கு தேசபக்தி பீறிட்டு கொண்டு வருகிறது.

விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளாதது மட்டுமல்ல காட்டிக் கொடுத்தது இந்தப் பார்ப்பனக் கூட்டம் தான். வாஜ்பாய் உள்ளிட்டவர்கள் மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்தார்கள். ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்தபோது உலக வரலாற்றை எழுதினார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பை உருவாக்கிய சாவர்க்கர் மன்னிப்புக் கடிதங்களை எழுதினார். ''என்னை விடுவித்தால் வெள்ளைக்கார அரசிற்கு முழு ஒத்துழைப்போடு இருப்பேன். உங்களுக்கு எதிராக செயல்படும் இளைஞர்களை மனம் திருத்தி உங்களுக்கு ஆதரவாளராக மாற்றி தருவேன்'' என்று கடிதம் எழுதிக் கொடுத்து வெளியே வந்த துரோகிகள் தான், இந்த பார்ப்பனக் கும்பல்.

நாட்டைக் காட்டி கொடுத்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இன்றைக்கு ஆட்சியில் வந்து அமர்ந்து கொண்டு 'பாரத்மாதாக் கி ஜெ' என கூச்சலிடு கின்றனர். கோழைத்தனமாக மன்னிப்பு கடிதம் எழுதிய ஆர்.எஸ்.எஸ். தலைவரை வீரசாவாக்கார் என தூக்கி பிடிக்கிறது பார்ப்பனீயம். இந்த நாட்டில் கொடூரமான வன்முறை சித்தாந்தம் எது என்று சொன்னால். அது பார்ப்பனீய சித்தாந்தம்தான். அதைத்தான் இந்த மண்ணில் மீண்டும் நிலை நிறுத்த பா.ஜ.க. முயல்கிறது. மதத்தின் பெயரால் கர்ப்பிணி பெண்களின் வயிற்றைக் கிழித்து அந்த சிசுவைக்கூட கொடூரமாக கொலை செய்து ஆட்டம் போட்ட, மனித நேயமற்ற வன்முறைக் கூட்டம்தான் பார்ப்பனீயம். இதை நாம் வேரோடு சாய்த்தாக வேண்டும்.

முகலாயர்கள் நீண்ட வருடங்கள் இந்த நாட்டை ஆண்டனர். அந்த ஆட்சி சரியான ஆட்சியா ? என்பதில் எங்களுக்குப் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால் அந்த ஆட்சியில்கூட இந்து முஸ்லீம்கள் இடையில் மதக் கலவரம் ஏற்படவில்லை. இந்து முஸ்லீம் மன்னர்களுக்கு இடையே பல போர்கள் நடைபெற்றிருக்கும். அது வெறும் மண்ணிற்கான போரே தவிர மதத்திற்கான போர் அல்ல.

சமூக நீதி சிந்தனையாளரான ஜோதிபாபுலே மராட்டிய மண்ணில் பார்ப்பனியத்திற்கு எதிராக மிகப்பெரிய பிரச் சாரங்களை மேற்கொண்டார். அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பார்ப்பனீயம்தான் திட்டமிட்டு இந்து முஸ்லீம் இடையே கலவரத்தை தூண்டினர். **1893**ல் புனேவில் நடந்தது தான் முதல் கலவரமாகும். அதற்கு முன்பு இந்து முஸ்லீம் இடையே எந்த கலவரமும் நடைபெறவில்லை. இது வரலாறு.

'சுயராஜ்ஜியமே எனது பிறப்புரிமை' என முழங்கிய பால கங்காதார திலகர் எனும் பார்ப்பனர்தான் 'விநாயகர் ஊர்வலம்' என்கிற பெயரில் ஒரு கலவர ஊர்வலத்தை சிறுபான்மை மக்களுக்கு எதிராக தொடங்கி வைத்தக் கொடூரன். இன்றைக்கு வரைக்கும் 'விநாயகர் ஊர்வலம்' என்கிற பெயரில்

இந்த நாட்டில் திட்டமிட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக விஷ விதைகளை விதைத்து வருகின்றன. இதற்கு பின்புலமாக இருந்து இயக்குவது பார்ப்பன ஆர்.எஸ்.எஸ் மதவெறிக் கும்பல். இதை தான் நாம் அம்பலப்படுத்துகிறோம்.

சட்டம் இயற்றும் சபையில், 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும்' என்கிற குரல் எழுந்தபோது இந்த பார்ப்பன திலகர் தான் சொன்னார்-'சூத்திரர்கள் பஞ்சமர்கள் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்களே தவிர அதை இயற்றும் சபைக்கு வருவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று சொன்ன யோக்கியர்தான் திலகர். இவர்தான் 'இந்துக்களின் ஒற்றுமையைப் பேசினார்' என்று இன்று பார்ப்பனர் கூட்டம் சொல்கிறது. இதை மிகுந்த வருத்தத்துடன் புரட்சியாளர் அம்பேத்கர் பதிவு செய்தார்.

**1925**இல் 'ஆர்.எஸ்.எஸ். அமைப்பு' டாக்டர் மூஞ்சே உள்ளிட்ட **5** டாக்டர் களால் உருவாக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் பார்ப்பனர்களே. **1931**இல் இலண்டனில் வட்ட மேஜை மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டிற்கு ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்க புரட்சியாளர் அம்பேத்கர் செல்கிறார். முகமது அலி ஜின்னா, காந்தி உள்ளிட்டோரும் செல்கின்றனர். இவர் களுடன் ஆர்.எஸ்.எஸ். டாக்டர் மூஞ்சே தலைமையில் ஒரு பார்ப்பனக் கூட்டமும் சென்றது.

### முசோலினியை சந்தித்தவர்கள்

மாநாடு முடிந்தவுடன் அனைவரும் நாடு திரும்பி விட்டனர். ஆனால் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூஞ்சேவும், அவருடன் சென்ற பார்ப்பனக் கூட்டமும், லண்டனிலிருந்து இத்தாலி சென்று முசோலினியை சந்தித்தனர். மனிதகுல விரோதியான முசோலினியிடம் பாசிச பாலபாடத்தை இவர்கள் கற்றுக்கொண்டு நாடு திரும்பினர் இது வரலாறு; யாராலும் மறுக்கமுடியாது. நாடு திரும்பிய டாக்டர் மூஞ்சே மராட்டிய மாநிலத்தில் உள்ள போல்தாரா என்ற பகுதியில் இந்து பாசிச வெறியை பயிற்சியளிப்பதற்கு ஒரு இராணுவக் கல்லூரியைத் தொடங்கினார்.

பின்னர் **1948**இல் காந்தி படுகொலை செய்யப்பட்டார். கொலையாளிகள் நாதுராம் கோட்சே உட்பட **8** பேர்கள் அனைவரும் சித்பவன் பார்ப்பனர்கள். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் முக்கியமாக மூஞ்சேவின் இராணுவ கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள். எனவே அன்றுமுதல் இன்றுவரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவராக இரண்டுமுறை தவிர்த்து இப்போதுள்ள மோகன் பகவத் உள்ளிட்ட அனைவரும் பார்ப்பனர்கள் என்பதுதான் மறுக்கமுடியாத உண்மை.

இந்த நாட்டின் 2004 முதல் 2008 வரை பல்வேறு இடங்களில் குண்டுகள் வெடித்தன. பல அப்பாவிகள் உயிர் இழந்தனர். உடனே பார்ப்பனக் கும்பல் குண்டுவெடிப்பை நிகழ்த்தியது இஸ்லாமியர்கள்தான் என்று பழியைத் தூக்கி போட்டனர். மாலேகான், அஜ்மீர் தர்கா, சம்ஜோதா இரயில் உள்ளிட்ட 16 இடங்களில் வெடித்த குண்டுகளின் பின்னனியில் இருந்தது யார் என்று பார்த்தால், 'அபினவ் பாரத்' என்கிற அமைப்பு வி.டி.சாவர்க்கரின் உறவினர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பு இருந்தது. இந்த அமைப்பில் உள்ளவர்கள் தான் இந்தகைய குண்டு வெடிப்புகளை நடத்தியது. இதை நாம் சொல்லவில்லை; மராட்டிய மாநில தீவிரவாத தடுப்பு படையின் தலைவரான ஒரு நேர்மையான அதிகாரியான ஹேமந்த் கார்கரேதான் நாட்டிற்கு உண்மையைச் சொன்னார்.

## ஹேமந்த் கார்கரேயை சுட்டுக் கொன்றார்கள்

குண்டுவெடிப்பு தொடர்பாக சுவாமி அசிமானந்தா மற்றும் ஒரு பெண் சாமியார் உள்ளிட்ட மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டனர். தங்களது சாயத்தை வெளுத்து உண்மையை கண்டுபிடித்து சொன்னார் என்கிற ஒரே காரணத்திற்காக நேர்மையான அதிகாரியான ஹேமந்த் கார்கரேவை சுட்டுக் கொன்றது பார்ப்பன மதவெறிக் கூட்டம். குண்டு வெடிப்பில் இந்திய இராணுவத்தில் பணியாற்றி புரோகித் என்பவரும் கைது செய்யப்பட்டார். இதன் மூலம் நாட்டைக் காக்கும் இராணுவத்தில் ஆர்.எஸ்.எஸ். ஊடுருவலை அம்பலபடுத்தியது இச்சம்பவம். அவரது லேப்டாப்பை கைப் பற்றி விசாரித்தபோது அதில் உள்ள செய்திகள் பயங்கரமான அதிர்ச்சிகர மானவை. எதிர் காலத்தை குறித்து ஒரு அச்சத்தை உருவாக்கக் கூடியவை.

அதில் இந்திய தேசியக் கொடியை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; காவிக் கொடிதான் எங்களுக்கு தேசியக் கொடி என்றும்; அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றிவிட்டு இந்துக்களுக்கான ஒரு புதிய அரசியல் அமைப்பும் சட்டமும் இயற்றவேண்டும் போன்ற பல்வேறு தகவல்கள் பதிவாகி இருந்தது. அந்த இராணுவ அதிகாரி புரோகித் உத்தரவுபடிதான் நாட்டில் பல்வேறு பகுதிகளில் குண்டு வைத்துவிட்டு அந்த பழியை முஸ்லீம்கள்மீது போட்டு, அப்பாவிகள் கைது செய்யபட்டனர்.

மேலும் ஆர்.எஸ்.எஸ். இராணுவ அதிகாரி புரோகித் கூறும்போது, 'உலக நாடுகளின் ஆதரவை நான் வாங்கித் தருவேன்' என்றும் 'இங்கு இராணுவ ஆட்சியைக் கொண்டு வரவேண்டும்' என்று கூறினார். மேலும் இஸ்ரேல் மொசாத் அமைப்புடன் கூட்டு சேர்ந்து இந்த பார்ப்பனக் கூட்டம் நிகழ்த்தியக் கொடூரம்தான் இந்த குண்டு வெடிப்புகள். உண்மையை அம்பலபடுத்திய ஹேமந்த் கர்கரேயை கொலை செய்துவிட்டு அதை பாகிஸ்தான். தீவிர வாதிகள் செய்தனர் என திசை திருப்பிய கூட்டம் தான் பார்ப்பனர் கூட்டம்.

இந்து இராஜ்ஜியத்தை பார்ப்பன இராஜ்ஜியத்தை கொண்டு வர மிகப் பெரிய சதி திட்டம் இன்றைக்கு நடந்துவருகிறது. அதற்கு மோடி ஆட்சி முயற்சிக்கிறது. எனவே ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் ஒரே எதிரி - பார்ப்பனர்கள் மட்டுமே என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இடஒதுக்கீடு கூடாது என பீகார் தேர்தல் நேரத்தில் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் சொன்னார்.

அந்த தேர்தலில் பீகார் மக்கள் மிக பெரிய சம்மட்டி அடியை பாஜகவுக்கு கொடுத்து பாடம் புகட்டியது. அந்த நம்பிக்கை எங்களுக்குத் தந்துள்ளது. ஆனால், பீகார் தோல்விக்குப் பிறகு இதே மோகன்பகவத் கூறுகிறார், ‘சமூதாயத்தில் ஏற்ற தாழ்வுகள் நீடிக்கும் வரை இட ஒதுக்கீடு நீடிக்கும்’ என்கிறார். இது தான் பார்ப்பன சூழ்ச்சி, நடிப்பு நரித்தனம். மதுரையில் அமித்சாவை கொண்டு வரச் செய்து தேவேந்திர குலமக்கள் வாயாலேயே எங்களுக்கு இடஒதுக்கீடு தேவை இல்லை. இடஒதுக்கீட்டால்தான் எங்கள் மீது சாதி தீண்டாமை திணிக்கப்பட்டுள்ளது என்று பெரியார் பிறந்த மண்ணிலேயே இட ஒதுக்கீடைக் குழிதோண்டி புதைக்க முயற்சி செய்கிறது பார்ப்பனக் கூட்டம்; அவர்களின் கனவு ஒருபோதும் பலிக்காது.

பெரியாரின் போர் முறைகளைப் பற்றி அண்ணா ஒருமுறை சொல்லும் போது பெரியாரின் போராட்டங்கள் சல்லிவேரை வெட்டுவது அல்ல அதன் ஆணிவேரை வெட்டுவது, மூல பலத்தையே அழித்து ஒழிப்பது எனக் கூறினார். பெரியாரின் போர்முறைகளை இன்றைக்கு வட மாநிலங்களில் உள்ள மக்களும் பயிற்சி செய்து பின்பற்ற தொடங்கிவிட்டார்கள்.

நம்து தலைவர் மணிஅண்ணன் மொழியில் சொல்ல வேண்டுமென்றால் ‘மெயின்சுவிட்சை ஆப்’ செய்வது ஆகும். அதை நாம் செய்ய வேண்டும். பார்ப்பனர்களின் மூல பலத்தை அழித்தொழிக்க நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டும்.

### திப்பு சுல்தான் மதவெறியரா?

திப்பு சுல்தானை இப்போது மதவெறியன் என்று சொல்கிறார்கள். திப்பு சுல்தான் மதவெறியனா ? இல்லை. திப்பு சுல்தான் பிறந்த நாளை நவம்பர் **20** அன்று கொண்டாடுவதற்கு கர்நாடக அரசு முயற்சி செய்தபோது இப் பார்ப்பனர் கூட்டம் திப்புசுல்தான் மதவெறியன் என்ற பொய்யான பிரச்சாரத்தைத் திட்டமிட்டு பரப்பி கலவரத்தை தூண்டி அக்கலவரத்தில் இருவர் படுகொலையும் செய்யப்பட்டனர். சமீபத்தில் திப்புசுல்தான் படத்தில் ரஜினி நடிக்க போகிறார் என்றவுடன் இங்குள்ள ராமகோபாலனும், இல.கணேசனும் துள்ளி குதிக்கிறார்கள். இப்போது ரஜினி நடிக்கவில்லை. அதற்கு பரிசாகத்தான் மோடி அரசு ரஜினிக்கு பத்மபூஷன் விருது கொடுத்துள்ளது.

திப்பு சுல்தான் மதவெறியர் இல்லை என்பதற்கு ஒரே உதாரணம், ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் பள்ளிவாசலும், கோவிலும் அருகருகிலேயே உள்ளது. திப்பு ஆட்சியில் பாதுகாப்பாக இருந்தன. திப்பு ஒரு மதசார்பற்ற மன்னன். மசூதிகளுக்கு மக்கள்தொகை அடிப்படையில் 10 சதவீதம் தான் நிதி ஒதுக்கி மீதம் 90 சதவீத நிதியைக் கோவிலுக்கு வழங்கினார். அந்த நிதியைச் சுரண்டித் தின்று கொழுத்த பார்ப்பனக் கூட்டம் பின்னாளில் அவரைக் காட்டியும் கொடுத்தது.

உழைக்காமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருந்தவர்களுக்கு எதிராக சட்டம் போட்டார். உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என சட்டம் போட்ட முதல் மன்னர் திப்பு சுல்தான்தான். தலித் மக்கள் நிலத்தைப் பார்ப்பனக் கூட்டம் அபகரித்தபோது அதைத் தடுத்து அந்த தலித் மக்களுக்கு நிலங்களைப் பெற்று தந்த மாமன்னர் திப்பு சுல்தான். ஒடுக்கப்பட்ட சமுதாயப் பெண்கள் மேலாடை அணிய தடை என்று சொன்ன பார்ப்பன நம்பூதிரிகளுக்கு எதிராக கொடுமைகளை எதிர்த்து உத்தரவு போட்டார் திப்பு சுல்தான்.

திப்பு சுல்தான் நினைத்திருந்தால் ஆங்கிலேயருக்கு அடிபணிந்து நிறைய சுகங்களைப் பெற்றிருப்பார். மாறாக இந்த நாட்டின் மீது பற்று கொண்டு வெள்ளை ஏகாதி பத்தியத்தை எதிர்த்து வீரமுடன் போராடிய வரை இந்த பார்ப்பனக் கூட்டம் தேச துரோகி என்றும் மதவெறியர் என வும் பொய்யான அவதூறு பிரச்சாரத்தை செய்கின்றனர்.

குழந்தைகளுக்கு பெயர் வைப்பதைக்கூட, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேர் வைக்கும் போது பாவாடை, வள்ளிக்கிழங்கு, மண்ணாங் கட்டி என பெயர் வைத்து அம்மக்களை கேவலப்படுத்தியது பார்ப்பனீயம். ஆனால் பெரியார் ரஷ்யா போன்ற புரட்சிகர பெயர்களைக் குழந்தைகளுக்கு வைத்து அழகு பார்த்தார். அவர்தான் பெரியார்.

காஞ்சி மக்கள் மன்ற நிகழ்ச்சியை இணையத்தில் பார்த்தபோது என் கண்களில் நீர் வரச் செய்த சம்பவம் ஒன்று நடந்தது. அங்கு ஒரு குழந்தைக்குக் கொளத்தூர் மணி அண்ணன் அவர்கள் பெயர் வைத்த போது என்ன பெயர் வைத்தார் தெரியுமா? தோழர்களே, காலமெல்லாம் பார்ப்பனர்களின் கொடுமைக்கு எதிராக போர்வாள் சுழற்றிய மாவீரன் திப்புசுல்தான் பெயரை வைத்தார்.

எனவே, பார்ப்பனர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். எங்கள் வாழ்நாளில் இனியும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம். பார்ப் பனரின் கொடுமைகளுக்கு அடிபணியமாட்டோம். அனைத்து மக்களையும் திரட்டி பார்ப்பனியத்திற்கு எதிராக மிகப்பெரிய பேராட்டங்களை முன் எடுப்போம், வெற்றி பெறுவோம் எனக்கூறி உரையை நிறைவு செய்தார்.